1982 மார்ச் 4]

ஆற்காடு கெங்கா ஈசுவரன் கோவிலிலிருந்து களவுபோன சிலைகள்.

* வினா எண் 343.—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காட்டிலுள்ள கெங்கா ஈசுவரன் கோவிலிலிருந்து பிள்ளையார் சிலையும், அம்மன் சிலையும் களவு செய்யப்பட்டு பிறகு காவல் துறையினரால் இரண்டு பஞ்சலோக சிலைகளும் வழக்கை முன்னிட்டு அனுப்பப்பட்டதா ?

(ஆ) களவாளிகள் மீது வழக்கு மன்றம் எடுத்துள்ள முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ), ஆம். 21—8—1979 அன்று சிலைகளைக் களவாடிய குற்றவாளிகள் 31—8—1979 அன்று கைது செய்யப்பட்டு அவர்கள்மீது தொடரப்பட்ட வழக்கு வேலூர் முதல் நிலை குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. குற்றவாளிகள் ஜாமீனில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஏ. எம். சேதுராமன்: இந்தக் கோவில் ஆற்காட்டில் பழமை வாய்ந்த கோவில். அந்தக் கோவிலில் இரண்டு சிலைகளும் இல்லாததால் அக்கோவிலில் திருவிழா நடைபெறுவது நிறுத்தப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ? அந்தச் சிலைகளை மீண்டும் அந்தக் கோயிலுக்குத் திருப்பித் தருவதற்கு கோர்ட்டுக்கு அல்லது அரசுக்கு அறநிலையத் துறை சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அது களவாடப்பட்ட சிலை என்ற அந்த வகையில் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தால் அந்த வழக்கு முடிவடைவது வரை அந்தச் சிலைகளைத் திருப்பித் தர மாட்டார்கள். அது உற்சவமூர்த்தியாக இருக்கிற சிலையாக இருக்குமானால் அதற்காக வேறு ஏற்பாடுகள் செய்வது பற்றி அறநிலையத் துறை பரிசீலனை செய்யும்.

திரு. ஏ. எம். சேதுராமன்: அந்தச் சிலைகளை அறங்காவலர் மூலமாகக் கொடுப்பதற்கு அறங்காவலர்களிடமிருந்து ரூ. 60,000 பெறுமான மதிப்பீடு சான்றுகொடுத்தால் அந்தச் சிலைகளை கொடுப்பதாகக் கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சான்றைக் கொடுப்பதற்கு அறங்காவலர்கள் அஞ்சுகிற காரணத்தால் அறநிலையத் துறை அதை ஏற்று அந்தச் சிலைகளை கோவிலுக்குக் கொடுக்க ஆவன செய்யுமா ?

(முற்பகல் 9.10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப் பொறுப்புக் கொடுத்தால் சிலைகளைத் திருப்பித் தருவதாக நீதி மன்றத்திலே தெரிவிப்பார்களானால், அதற்கான முயற்சிகளை அறநிலையத் துறை மேற்கொள்ளும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிலை திருட்டு தமிழ்நாட்டிலே ஒரு தொடர் நடவடிக்கையாக பல இடங்களில் நடைபெற்று, வெளி நாடுகளுக்கு கடத்திச் செல்லப்பட்டு, அண்மையிலே கூட லண்டனிலே பல லட்சக்கணக்கான பெருமதிப்புள்ள சிலைகள் அங்கிருப்பதாக பத்திரிக்கைச் செய்தி வந்திருக்கிறது. இந்தச் சிலை திருட்டை ஒட்டுமொத்தமாக நிறுத்துவதற்கு என்ன முறையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மிகுந்த தீவிரமான நடவடிக்கைகள் பல வகைகளிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும், அவைகளையெல்லாம் மீறித்தான் நடந்து கொண்டிருக்கின்றது. இன்னும் ஒரு கருத்தை இந்த நேரத்தில் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தச் சிலை திருட்டு சம்பந்தமாக செய்திகள் வருகின்ற போது, 10 இலட்சம், 20 இலட்சம், 50 இலட்சம் என்று அவைகளினுடைய மதிப்புகளை பத்திரிகைகளில் போடுகிறார்கள். அதனால் பல பேருக்கு ஏதாவது ஒரு சிலையைத் திருடினால், பல இலட்சங்களைச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் இப்போது வளர்ந்து கொண்டு வருவதாகத் தெரிகிறது. ஆனால் எல்லாச் சிலைகளும் பல லட்சக்கணக்கான பெறுமானமுள்ள சிலைகள் அல்ல. ஆனால், இப்படிப்பட்ட செய்திகள் வந்து, அதிலே ஆர்வத்தைப் பல பேருக்கு ஏற்படுத்தி விடுகிறதோ என்கிற ஐயப்பாடு இப்போது அரசுக்கு வந்திருக்கிறது. இருந்தாலும் இந்தச் சிலை திருட்டைத் தடுப்பதற்கு மிக அதிகமான அளவிலே இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. திருடப்பட்ட சிலைகளை மீட்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, அப்படி மீட்கும் போதுதான் இந்தச் செய்திகள் எல்லாம் இப்போது வெளியே வந்து கொண்டிருக்கின்றன.

1982 மார்ச் 4]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, * * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மத வாதிகளின் எண்ணங்களைப் புண்படுத்துவதாக இருப்பதால், இந்தக் கேள்வி அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈஸ்வரன் கோயில் உற்சவர் சிலையின் மதிப்பு என்ன ? அந்தச் சிலையை வழி பாட்டிற்கு நீதிமன்றத்திலே இருந்து வாங்கித் தருவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ? அதனால், உற்சவம், திருவிழா செய்வது தடைபடுவதால், அரசு அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே இருந்து 60,000 ரூபாய் அதற்கு ஜாமீன் தர வேண்டுமென்று கேட்பதிலிருந்து, அதனுடைய மதிப்பு அதையொட்டி இருக்கிறது என்பது தெரிகிறது. அப்படி தர வேண்டுமென்று கேட்பார்களானால், அதற்கு அற நிலையத்துறை பொறுப்பேற்று அதுபற்றி பரிசீலிக்கும் என்பதை நான் முதலில் கேள்விக்கு பதிலளித்திருக்கிறேன்.

திரு. என். எ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை ; அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

தென்காசி விசுவநாதர் ஆலயத்திற்கு ராஜகோபுரம் கட்டும் பணி.

* வினா எண் 344—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி ஜில்லா, தென்காசி விசுவநாதர் கோயில் ராஜகோபுரம் கட்டுவது தொடர்பாக அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம். ஆலய அறங்காவலர் குழு கோரிக்கை வைத்ததின் தொடர்பாக, திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு திருப்பணி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS